தொகுதி 7] [பகுதி 6

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபாநு ௵ புரட்டாசி ௴
SEPTEMBER 1942

பிரசுர கர்த்தர்கள் :

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. தாய் மொழி கற்பித்தல் .... .... .... 137
—M. சுப்பிரமணியம்

2. அனுபவக் கனிகள் .... .... .... 144
—P. N. கல்யாணசுந்தரம்

3. பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே கூட்டுறவை எவ்வாறுண்டாக்கலாம் .... .... 148
—K. ராமச்சந்திர ராவ்

4. செய்தித் திரட்டு .... .... .... 153

5. கடிதப் பெட்டி .... .... .... 158

6. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 159


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினல் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 ஆகஸ்டு மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள்:—

செங்கல்பட்டு — CH. 22, 23, 24, 40.
வட ஆற்காடு — N. A. 21-A.
தென்னுற்காடு — S. A. 90.
தஞ்சாவூர் — Tan. 25, 28, 56.
திருச்சி — Tri. 10, 11, 16-A.
ராமனுதபுரம் — Rd. 71.
மதுரை — Md. 120, 133.
திருநெல்வேலி — Tin. 55, 56.
சேலம் — S. 10-A., 12, 13, 14, 20, 42.

குறிப்பு —சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன் களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 7 | 1942 ஷு செப்டம்பர் மீ<br>சித்ரபாநு ஷு புரட்டாசி மீ | பகுதி 6 |
| --- | --- | --- |

## தாய்மொழி கற்பித்தல்

---

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

### XIV. செய்யுள் கற்பித்தல்—சில மாதிரிப் பாடங்கள்

இளம்பாலர்களுக்குத் தக்க செய்யுட்கள்.

நம் நாட்டுப் புலவர்கள் அன்னியநாட்டுப் புலவர்களைப்போல இளம்பாலர்களுடைய விருப்பம், மனத்தன்மை, முதலியவற்றை அறிந்து "பாலர் பாட்டுகள்" (Nursary Rhymes), போன்ற எளிய சந்தங்களும், அசைகளும், பிராசங்களும் நிரம்பிய செய்யுட்களைத் தனிப்பட அதிகமாக எழுதவில்லை. நம் வீட்டுத் தாய்மார்களுக்கும் பாட்டிகளுக்கும் இப்படிப்பட்ட பாட்டுகள் அதிகமாகத் தெரிந்திருக்கும். சிறு குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைக்கும்போது "தாலாட்டு" "தொட்டில் பாட்டு" என்றும், சோறு ஊட்டும்போது "நிலா நிலா வாவா" என்றும், பாடுவது உண்டு. மேலும் "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" "ஆனையானை அழகரானை" "காக்கா எங்கே மரத்துமேலே" "சிட்டுக் குருவி தட்டிவந்தது" "குளிர்கிறது குளிர்கிறது குப்பனே கூடையை கொண்டுவோ மறைகிறேன்" "வல்லபை கணநாதா" முதலிய அநேக சிறு பாட்டுகளைப் பாடித் தங்கள் குழந்தைகளைத் தாய்மார்களும் பாட்டிகளும் திருப்தி செய்வதுண்டு. திண்ணைப் பள்ளிக்கூடங்களில் "காலையில் எழுந்திருந்து கால் முகம் சுத்திசெய்து" "அரி ஓம்" முதலிய பாடல்களைப் பிள்ளைகள் பாடுவது உண்டு. ஆனால் இவை தனிப்பட்டவை. பொதுவாகப் பண்டைக் காலத்துப் புலவர்கள் இளம்பாலருக்கென்று செய்யுட்கள் எழுதவில்லை. ஏனென்றால் நம் புலவர்கள் எல்லோரும் உயர்ந்த லக்ஷியத்தையே கொண்டது மாத்திரமின்றி

பொருளற்ற வெறும் சொற்களைக் குவித்து வைப்ப[illegible] விளையாட்டினிமித்தமும் விரும்பவில்லை. மேலும் அவர்கள் பிள்ளைகளின் உணர்ச்சிக் கருவிகளை அதிகமாகத் தூண்டி அவர்களை மகிழ்ச்சி அடையும்படி செய்ய நோக்கம் கொண்டவர்களும் அல்லர். உணர்ச்சி வாயிலாகப் பிறக்கும் மகிழ்ச்சி சிறிதளவு தான் என்றும் சிறிதுநேரம் தான் இருக்கும் என்றும் அவர்களுடைய கருத்து. பாலர்கள் அடையும் இன்பத்திற்குக் காரணம் இசை. இசை உண்டாக்குவது சொற்றொடர் அலங்காரம். பொருள் நிறைந்த சொற்றொடர்களுள்ள செய்யுட்களை படித்துக் காட்டினால் இளம்பாலர்கள் இசையையே விரும்புவார்கள். பின்பு ஒரு காலத்தில் பொருளையும் தெரிந்து கொள்வார்கள் என்ற நோக்கத்தோடு தான் இப்படிச் செய்தனர் போலும். மேலும் அக மகிழ்ச்சிக்கும், மனமகிழ்ச்சிக்கும் காரணமாயுள்ளவை, செய்யுட்களில் அடங்கி இருக்கும் கற்பனைப் பொருள், வருணனை, உண்மைப் பொருள் ஆகிய இவையேயாகும். இவற்றோடு உள்ளத்தைத் தாக்கி அதனை மகிழச் செய்வது சொற்களின் "நாதம்" அல்லது "ஓசை". இந்த நுட்பத்தை நன்றாக அறிந்தவர் ஔவையாரே யாவர். சாதாரண உண்மைகளை வெகு எளிய உபமானத்துடன் தெளிவான நடையில் தாம் இயற்றியுள்ள "ஆத்திச்சூடி", "கொன்றை வேந்தன்", "நல்வழி" முதலியவற்றில் இவர் விளக்கிக் காட்டியுள்ளார். "உலகநீதி" யும் இத்தன்மையே வாய்ந்தது.

இவை எல்லாம் ஒரு குறிப்பான நீதிப்பொருளையே நேராகப் போதிக்கின்றன. கதைத்தன்மை இல்லாததனாலும், செய்யுள் வரிகளில் அடங்கியுள்ள நீதிப்பொருளைப்பற்றிய அனுபவம் எல்லா இளம் பாலர்களுக்கும் அதிகமாக இல்லாததாலும் இவற்றில் அதிக மகிழ்ச்சி அடையாமலே பாலர்கள் மனப்பாடம் செய்கின்றார்கள். "ஆத்திச்சூடி" முதலிய செய்யுட்கள் எல்லாம் ஒவ்வொருவரியும் ஒரு "சிறு சூத்திர"மேயாகும். கருத்தடக்கமும் மிக உயர்ந்ததாக இருக்கிறது. ஆகவே இவற்றை அதிகமாக இளம் பாலர்களுக்குச் சொல்வதில் அதிக பலன் இல்லை.

### பாரதியாரும்—தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும்

உண்மையை தன்னில் தானே விளக்கிக்காட்டும் ஒரு சிறுசம்பவத்தையோ, பொருளையோ, கதையையோ, அனுபவத்தையோ, முதலாகக்கொண்டு சிறுவர்கள் அகமகிழவும், உற்சாகம் உண்டாகவும், பாடல்கள் செய்தவர்கள் ஸ்ரீபாரதியாரும், தேசிக விநாயகம்பிள்ளை அவர்களுமேயாவர். இவர்கள் இளம் பாலருக்காகச்செய்து உள்ள பாட்டுகள் அவர்களுடைய ஆவலைத்தூண்டி, நூதனமாயுள்ளவற்றில் பற்றுஉண்டாகும்படிசெய்கின்றன. எளிய நடை, எளியசந்தம், சுலபமானவருணனை, எல்லோருக்கும் தெரிந்ததும் சாதாரணமானதுமான உபமானம், தாளக்

கட்டு, ஆகிய இவற்றைக்கொண்டு ஒரு சிறுசம்பவம், ஒரு எளியபொருள் முதலியவற்றை வெகு அழகாக வருணித்துக் கூறியுள்ளார்கள். விசேஷ உண்மைப்பொருளையும் அவற்றில் அடக்கியுள்ளார்கள். இளம் பாலர்கள் அவற்றைப் படிக்கும்போது, நீதிப்பொருளைத் தழுவிய வருணனைகளும், அழகான சொற்களும் இன்னிசையும் அவர்களுடைய மனத்திற் பதிந்து, அவற்றை நினைக்கும்போது அவர்கள் தங்களையும் அறியாமலே உயர்ந்த உண்மைப்பொருளை உணர்ந்து கொள்கிறார்கள். பாரதியார் எழுதிய செய்யுள் ஒன்றை இங்குக் குறித்து அதைப் போதிக்கும் விதத்தைப்பார்போம்.

## நல்ல வார்த்தைகள்

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்!
சீருக் கெல்லாமுதலாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

2. வெள்ளை நிறத் தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!
பிள்ளைகள் பெற்றதப்பூனை—அவை
பேருக்கொரு நிறமாகும்.

3. சாம்பல் நிறம் ஒருகுட்டி—கருஞ்
சாந்து நிறம் ஒருகுட்டி
பாம்பு நிறம் ஒருகுட்டி—வெள்ளைப்
பாலின் நிறம் ஒருகுட்டி.

4. எந்த நிறம் இருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரம்—அன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ?

5. வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்—அதில்
மானிடர் வேற்றுமை இல்லை;
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!

**ஆசிரியர் தம் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.**

இச்செய்யுளில் அடங்கி இருக்கும் கவியின் கருத்து என்ன என்பதை ஆசிரியர் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஒளவை பிராட்டியார் கூறியபடி "சாதி இரண்டொழிய வேறில்லை", உலக மனிதர்கள் பல நிறத்தவராயினும், அவர்களுடைய எண்ணங்களும் செய்கைகளும், சிந்தனைகளும் ஏறக்குறைய ஒன்றாகவே இருக்கின்றன.

இவர்கள் எல்லோரும் ஒரே கடவுளால் படைக்கப்பட்டவர்கள். இது உண்மையான விஷயம். இதை அறிந்துகொள்பவனுக்குத் தெய்வம் துணையாக இருக்கும். மேலும் கவிஞர் பூனையைக் குறித்துப் பாடிய தென்ன? இந்தப் பிராணி ஒரு சாதாரண வீட்டுப் பிராணி. இதைப் பற்றி எல்லாப் பிள்ளைகளும் ஒருவிதமாக அறிவார். ஏனென்றால் இதைத் தினந்தோறும் பார்க்கின்றார்கள். பூனைத் தன் குட்டிகளிடம் காட்டும் அன்பு மிகவும் விசேஷமானது. "பூனைகுட்டியைத் தூக்கிப் போவதுபோல்" என்னும் பழமொழியும் இருக்கிறது. தாய்ப்பூனைத் தன் குட்டிகளை வெகு பத்திரமாகவும், அன்போடும் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் தூக்கிச்செல்கிறது. அன்றியும் பாரதியார் ஒரு சிறந்த தேசபக்தர். உலகத்தில் உள்ள ஜாதிவித்தியாசத்தாலும், வருண வித்தியாசத்தாலும் உண்டாகின்ற கஷ்டங்களை உண்மையாக உணர்ந்திருக்கிறார். நம் இந்திய நாட்டில் பலவர்ண மனிதர்களால் ஏற்படும் குழப்பத்தையும் சச்சரவையும் கண்டுள்ளார் எனினும் எல்லோரும் ஒரு தாயின் வயிற்றில் தோன்றிய பூனைக்குட்டிபோல், அவர்கள் பாரதமாதாவின் புதல்வர்களாவார்கள். உலகத்தில் காணும், வெள்ளையர், கரும் நீக்ரோவர், காகேசியர், மங்கோலியர், சிகப்பு இந்தியர் முதலியவர்கள் போன்ற பல வர்ணத்தவர்கள் இருப்பினும், அவர்கள் எல்லோரும் ஒரே உலக மாதாவின் குழந்தைகள். அவர்களுடைய எண்ணங்களும் செய்கைகளும் ஒரு தன்மையில் ஒன்றாகவே காண்கின்றன. இந்த ஆழ்ந்த கருத்தை இச்செய்யுளில் அடக்கி, அதைப் படிக்கிறவர்களுக்குக் குறிப்பாகவும், உண்மையாகவும் இது புலப்படும்படி செய்திருக்கிறார். எனவே இதைப் போதிக்கும் ஆசிரியர் இக்கருத்துக்களை நன்றாக மனத்தில் அமைத்துக்கொண்டால், அவருக்கு உற்சாகம் ஏற்படுவதோடு, அதிக சிரத்தையும் தோன்றும்.

### பிறகு என்ன செய்யலாம் ?

(a) இப்படி ஆசிரியரின் உயர்ந்த கருத்தைத் தெரிந்து கொண்ட பிறகு என்ன செய்யலாம்? இச்செய்யுளில் அடங்கி இருக்கும் பூனையையும் அதன் குட்டிகளையும் பற்றிய விஷயம் ஒரு அழகான சிறு சித்திரத்தில் அமைக்கப்படலாம். வெண்மையான ஒரு பூனையும், சாம்பல், கருஞ்சாந்து, பாம்பு, வெள்ளை பால் ஆகிய நிறங்களையுடைய நான்கு குட்டிகளைப் படத்தில் எழுதலாம். பின்பு பிள்ளைகள் அப்படத்தை உற்று நோக்கும்படி செய்யவேண்டும்.

(b) சம்பாஷணை. பிறகு இதைப் பற்றி ஒரு சுருக்கமான உரையாடல் செய்வது நல்லது. சம்பாஷிக்கும்போது, பொருட்பாடத் தன்மையை நோக்கமாகக் கொண்டு அதிக விரிவாகக் கேள்வி கேட்டு வேண்டாத விஷயங்களை வருவிப்பது அனாவசியமான வேலை. கேட்கும் கேள்விகள் எல்லாம் தாய்ப் பூனைக்கும் பலவர்ணமான குட்டிகளுக்கும்

இயற்கையாக உள்ள அன்பு, ஆசை முதலியவற்றைக் குறித்ததாகவே இருக்கவேண்டும். "மானிடர்வேற்றுமை இல்லை" "எண்ணங்கள் செய்கைகள் ஒன்றே" ஆகிய கருத்தே நோக்கமாக இருக்கவேண்டும். இவற்றை வலியுறுத்த இன்னும் சில உதாரணங்கள் தரலாம்.

(c) மாதிரி வசிப்பு இச்செய்யுளில் பாரதியார் அமைத்திருக்கும் சந்தம் மிகவும் எளிதானது. அவர் எப்போதும் "சிந்து' அல்லது "நொண்டிச் சிந்து" என்னும் ஒரு எளிய இசையைக் கொண்டு பாடுவது வழக்கம். இன்னும் "பாம்பாட்டி சித்தர் பாடல்" "நந்தனர் கீர்த்தனை" கும்மி, பள்ளு முதலிய "மெட்டுகளை" அமைத்துப் பாடுவார். ஏனென்றால் இவைத் தாளக்கட்டுக்கு நன்கமைந்து இருப்பதோடு, பாடுகையில் ஒரு பலமான உணர்ச்சியையும் நகர்ச்சியையும் (Intense feeling and Movement) உண்டாக்குகின்றன. ஆகவே இச்செய்யுளை நொண்டிச் சிந்தில் ஆதி தாளத்தில் பாடலாம். அல்லது, மோகன ராகம், அடதாளத்திலும், சாப்புத் தாளத்திலும் அமைத்துப் பாடலாம். பெண் பிள்ளைகள் இதைக் கும்மி மெட்டில் கும்மி அடிக்கலாம்.

(d) உபமானம். வெள்ளைப் பூனை புனிதமான உயர்ந்த உலகத் தாயைக் குறிக்கும். பலவர்ணக் குட்டிகள் பல நிற மக்களைக் குறிக்கும். வித்தியாசத்தில் ஒற்றுமையைக் காட்டுகின்றன எண்ணங்களும் செய்கைகளும்.

(e) விளக்கிக் காட்ட வேண்டியவை. பதவுரை பொழிப்புரை செய்யுளின் அழகைக் கெடுக்கும். ஆசிரியர் சொற்களைப் பிரித்து வாசிக்கும்போதே பிள்ளைகள் பொருளை அறிந்து கொள்ளவேண்டும். "பேருக்கு ஒரு நிறமாகும்" என்பது உண்மையான விஷயம். ஒருவன் பெயரை அவன் வர்ணத்தால் வழங்குவது சகஜம். கருப்பன், வெள்ளை என்று மனிதர்களை அழைக்கிறோம். பாம்பு நிறக்குட்டியைக் கண்டால் பாலர்கள் பயப்படுவார்கள். இந்த விஷயம் கற்பனை சக்தியைத் தூண்டுவதாயினும் அதிகம் வற்புறுத்தக்கூடாது.

(f) சிறு பாலர்களுக்கு இலக்கணக் குறிப்புக்களை செய்யுட் பாடத்தில் போதிக்கக்கூடாது. வேண்டுமானால், "கண்டீர்" காணீர் என்பதை அழுத்திச் சொல்லலாம்

### மற்றொரு மாதிரி

பூனையின் இனமாகிய புலியைப் பற்றிய செய்யுள், இளம் பெண் பாலர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. இதை எழுதியவர் தேசிக விநாயகம் பிள்ளை ஆவர். இவர் பாரதியாரைப் போலவே கவித்திறமை வாய்ந்தவர். மிருகக் காட்சிச் சாலை ஒரு புலிக் கூண்டைப் பற்றி இவர் எழுதியதைப் பார்ப்போம்.

## புலிக் கூண்டு

1. பந்தம் எரியுதோடி?—கண்கள்
   பார்க்க நடுங்குதடி!
   குந்தம்வாள் ஈட்டி எல்லாம்—கூடவே
   கொண்டு திரியுதடி.

2. வாயைப் பிளக்குதடி! கையுறை
   வாளும் உருவுதடி!
   பேயைப் படைத்த பின்னே—இதனையும்
   பிரமன் படைத்தானடி!

3. வாலை முறுக்குதுபார்—வால் நுனி
   வட்டம் சுழலுதுபார்!
   சாலப்பதுங்குதுபார்—நம்மீது
   சாடவும் நோக்குதுபார்.

4. இடித்து முழங்கு தொண்டையும்
   இரும்பாலே செய்ததோடி?
   அடுத்து நெருங்காதே நீ—அதுமிக
   ஆங்காரம் கொள்ளுதடி.

5. மானைப் படைத்த தெய்வம்—புலியையும்
   வளர்த்து விடலாமோடி?
   தேனைப் பழித்த சொல்லாய்! எனக்கு நீ
   தெரிந்துரை செய்வாயேடி?

மேற்கூறிய செய்யுளில் சில இளம் பெண் பாலர்கள் மிருகக் காட்சி சாலைக்குப்போய் அங்கே ஒரு புலிக்கூண்டினருகே நின்று சம்பாஷணை செய்கின்றார்கள். அவர்கள் புலியைக் கண்ட உடனே சிற்சில எண்ணங்கள் அவர்களுக்கு உண்டாகின்றன. புலி தன் நகங்களை நீட்டி, வாயைப் பிளந்துகொண்டு, வாலை முறுக்கி அதை வட்டமாக்கி, ஓரிடத்தில் பதுங்கி இடித்து முழக்கம் செய்கிறது. அதன் கண்கள் பந்தம் போல் எரிகின்றன. அவற்றைப்பார்க்க நடுங்குகிறது நகங்கள், வாளையும், ஈட்டியையும் ஒத்திருக்கின்றன அது போடும் சத்தம் இடி போல் இருக்கிறது. அதன் தொண்டை இரும்போ என்னவோ என்று இப்பிள்ளைகள் சந்தேகிக்கிறார்கள். அது அவர்கள் நிற்குமிடத்தை நோக்கி வருவதுபோல் இருக்கிறது. அழகான மானைப்படைத்த தெய்வம் கோரமான இப்புலியையும் படைத்திருக்குமோ என்று அவர்கள் சந்தேகிக்கிறார்கள். இச்செய்யுள் புலியைப் பற்றி வருணித்துக் காட்டும் மிக அழகான செய்யுள். வர்ணனை வெகு உண்மையாகவும், வருணிக்கப்படும் பொருள் நம் கண்முன் நிற்பதுபோலும் இருக்கிறது. சகல வல்லமையும் உடையவர் கடவுள் என்பதைக் காட்ட

"மானைப் படைத்த தெய்வம் புலியையும் வளர்த்தது" என்றார். தேன் மொழி, மான் விழி என்று பெண்களை வருணித்துக் கூறுவதற்குத் தக்க சொல். இந்த கருத்துக்களைமுன் கொண்டு ஆசிரியர் இப்பாடலைப் போதிக்க வேண்டும். இது ஒரு கும்மி மெட்டாகும். "நடுங்குதடி" "திரியுதடி" என்பதனால் பெண் பிள்ளைகளுக்கே எழுதியது போலும்.

விளக்க வேண்டிய விஷயம்.

பந்தம், குந்தப்வாள், ஈட்டி, கை யுறைவாள், பேய், பிரமன் முதலியனவாகும். இவற்றைப் படம் போட்டுக் காட்டுதல் நலம்.

வேறு செய்யுட்கள்.

"உலகநீதி" "ஆத்திச்சூடி" "கொன்றை வேந்தன்" என்னும் செய்யுட்களைப் போதிக்கும்போது அவற்றில் உள்ள கடினமான செய்யுள் வரியை நீக்குவதுடன் பிள்ளைகளுடைய அனுபவத்திற்குக் கஷ்டமானதையும், பொருள் எளிதில் அறிய முடியாதன வற்றையும், அதிக நீதிப்பொருள் நிறைந்தவற்றையும் நீக்கி விடுவது உசிதமாகும். "தையல் சொற் கேளேல்", "இல்லறமல்லது நல்லறமன்று". முதலியன கொஞ்சம் கடினமானது. கடவுள், கோயில், குரு தாய் தந்தையர், கல்வி, சேரக்கூடாதவர் (கெட்ட சிநேகிதர்), பெரியோருடைய நட்பு, ஊக்கமுடைமை, மேன்மக்களுடைய சொல், உழவின் மேன்மை, இராஜ பக்தி, பொருள் சிறப்பு, காலத்தின் அருமை, கோபத்தினால் உண்டாகும் தீமை, முதலியவற்றை நோக்கமாக வைத்துக்கொண்டு, தொகுப்பது நல்லது. இவற்றைப் போதிக்கிற காலத்தில் முதலில் ஒரு சிறு சம்பாஷணை செய்வதோடு கடைசியில், புராணம், காவியம், இலக்கியம் முதலியவற்றிலிருந்து ஒரு கதை சொல்வது நல்ல முறையாகும்.

(தொடரும்)

# அனுபவக் கனிகள்

---

(P. N. Kalyanasundaram, *Headmaster, Board School, Kayapakkam.*,

## 5. கால அட்டவணையின் அவசியம்

காலத்தின் சிறப்பு—காலம் கருந்தனமொத்தது. அதாவது ஒருவனுக்குச் செல்வம் எவ்வளவு அருமையானதோ அதைவிட அருமைவாய்ந்தது காலம்.

1. ' அருவினை என்பஉளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்

2. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்

3. காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது '

—திருவள்ளுவர்.

இப்படியாகக் கற்றறிந்த பெரியார்கள் காலத்தின் அருமையை அரிய பாடல்களால் நமக்கு விளக்கியுள்ளார்கள். மக்கள் யாவர்க்கும் காலத்தின் அருமையை விளக்குவது ஆசிரியர் கடன். மனிதனின் பயிற்சிக்கூடம் நமது ஆரம்பப்பள்ளியாகும். அதுபற்றியேதான் பாடசாலையில் கால அட்டவணையை மிக முக்கியமாகக் கவனிக்கலாகிறது.

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றுகொண்டே இருக்கிறது. 1942-ம் ஆண்டு குண்டும் புகையுமாகப்பிறந்து இன்று 9 மாதங்கள் ஓடிவிட்டன. இப்படியே மக்களின் ஏழ்மைநிலை, துக்கம், பிணி, உயர்வு யாவையும் காலம் லக்ஷியம் செய்யாது ஓடிக்கொண்டேயிருக்கும்.

அதிவீர ராமபாண்டியனும் அரசர் பெருமான் தமது வெற்றி வேற்கையில் ' மனிதனுக்கு வயது நூறல்லதில்லை ' என்றார். நடமாடும் வயது முப்பதே என்றார். பூரண ஆயுள்உள்ளவனுக்குத்தான் அதுவும்.

மேல் நாட்டு அறிஞர்களும் காலத்தின் அருமையைப் பலவாறு உணர்த்தியுள்ளார்கள். பின்வரும் அடிகளைக் காண்க:

" Do good to-day. Time passes. Death is near. Death falls upon all unawares like a ferocious wolf. It carries off the weak and the strong alike, the brave and the timorous; the wise and the foolish and those whose objects are not yet achieved."

ஒரு பெரியார்

'**Better three hours too soon than a minute too late.**'

ஷேக்ஸ்பியர்

'**Success in life quarter of an hour before his time**'

'*Nelson*'

மூன்றும் ஜார்ஜ் அரசர் இங்கிலாந்தில் ஒரு சமயம் கனவான்களை 'டீபார்டி' ஒன்றுக்கு அழைத்திருந்தார். ஒரு கனவான் சற்றுநேரங் கழித்து விருந்துக்கு வந்தார்.

அரசர் ஏன் காலந்தாழ்த்தி வந்தீர் என்றதற்குக் கனவான்

'**Better late than never**' என்றார். அதற்கு அரசர் சிறித்துக்கொண்டே

**Better never than late** என்று கூறினாராம்.

அமெரிக்கர்கள் காலத்தை வீணாக்குவதில்லை. அவர்களுக்கு வீணாகும் ஒரு நிமிஷம் லக்ஷக்கணக்கில் நஷ்டமாம்.

'**Time is money**' என்பது ஆங்கிலப் பழமொழி.

'**Time is my estate**' என்று ஒரு இதாலியதத்தத்துவ சாஸ்திரி கூறிவந்தாராம். **Drexibus** என்பவரை **Faustinus** என்பார் ஆச்சரியத்துடன் இவ்வளவு வேலைகளையும் நீர் எப்படிச் செய்துமுடித்தீர், என்ன அதற்கவர், வருஷத்திற்கு 365 நாள் அதாவது 8760 மணிநேரம். இன்னும் எத்தனையோ அரியகாரியங்களைச் செய்திருக்கலாமே நாம் வீணாக்கும் ஒவ்வொரு நிமிஷமும் 'நிமிஷக் கொலை' அல்லவா என்றாராம்.

இது போன்ற அளவற்ற உதாரணங்களுள.

நம் மக்கள் பணத்தின் அருமை அதைச் சிக்கனமாக உபயோகித்தல் இவைகளில் நிகரற்றவர்கள். ஆனால் காலத்தின் அருமையை மட்டும் சரியாய் உணருவதில்லை. பேசும்போதுமட்டும் அந்தக் காரியத்தைச் செய்து விட்டீரா? என்றால் **No time sir**! ஒழியவில்லை வேலை சரியாக இருக்கிறது என்கிறார்கள். இந்தச்சாரார் சோம்பேரிகள். குறித்தவேலையைக் குறித்த நேரத்தில் செய்யாமல்—காலந்தாழ்த்துவதால், எவ்வளவோ கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்படுகின்றன.

ரயில், தபால்கட்டு, மில்சில்வேலை இவைகள் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறுவதால்—எத்தனைபேர் நாள்தோறும் ரயில் தவறிக் கஷ்டப்படுகிறார்கள்—அவசரமான கார்டு ஒன்று அனுப்பமுடியாமல் வருந்துகிறார்கள்—மில் மூடிவிட்டபிறகு நேரங்கழித்துச் சென்றவேலையாள் அன்றுகூலியை இழக்கிறான்! நமது தினசரிக்கடமைகளும், போஜனமும், நித்திரையும் குறித்த காலங்களில் நடைபெறவேண்டும். அகாலபோஜனம் அகால நித்திரைகளால் நம் உடல்வலிவு குன்றி வியாதிக்குள்ளாகிறோமல்லவா! மேற்சொன்ன உதாரணங்களிலிருந்து காலத்தின் அருமையை உணர்ந்து ஆசிரியர்களாகிய நாம் வருங் காலப் பிரஜைகளாகிய—நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்

குக் காலத்தின் அருமையை உணரும்படி போதித்தும் பள்ளிக்கூடக் கால அட்டவணையைக் கண்டிப்பான முறையில் ஒழுங்காக அனுசரித்துக் காட்டியும் விளக்கல் வேண்டும்.

எல்லாக் கடிகாரங்களும் பொய்த்தாலும், மணி வித்தியாசம் காட்டினாலும்—சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், தாவரம், கோழி முதலிய இயற்கைக் கடியாரங்கள் குறிப்பிட்ட நேரத்தில் சற்றேனும் தாமதியாது தத்தம் வேலைகளைச் செய்து வருவதை ஆசிரியர்களாகிய நாம் சிறுவர்களுக்கு அவ்வப்போது காட்டிக் காலத்தின் அருமையை விளக்கவேண்டும். பள்ளிக்கூடக் கால அட்டவணையில் கண்டுள்ள காலப்படி அவர்கள் நடந்து கொள்ளும்படி எச்சரிக்க வேண்டும். நேரங் கழித்துப் பாடசாலைக்கு வருவதென்பது மிகவும் தவறான காரியம் என்பதை அவர்கள் உணருமாறு இதமாகக் கண்டிக்கவேண்டும். லேட்டாகப் போனால் இரண்டு கசையடிகள் தானே? என்று மாணவன் அலக்ஷியமாக நினைத்து விடாதபடி வற்புறுத்தல் வேண்டும்.

கால அட்டவணை ஒன்று பாடசாலையில் இருக்கிறது. அதுபோன்று மாணவர்கள் ஒவ்வொருவனும் தம் தம் தினசரிக் கடமைகளை வீட்டில் செய்வதற்கு 'நாள் அட்டவணை' ஒன்று தயாரித்து அதன்படி நடந்து வருவார்களேயாயின் வருங்காலப் பிரஜைகள் உயர்ந்த சமூகத்தைச் சிருஷ்டித்து உத்தமமான வழியில் நடப்பார்கள். தேசம் முன்னேற்றமடையும் சிறிய தகராறுகளும் பூசல்களும், கலாம்களும் விளையா? பையன்களின் கால அட்டவணை இடம், காலம், வயது இவைகளுக்குத் தக்கபடி அமைதல் வேண்டும்.

## உ-ம் ஆரம்பப் பள்ளியில் பயிலும் சிறுவனின் கால அட்டவணை.

காலை 5 மணி—6 மணி படுக்கை விட்டெழுதல் கடவுள் வணக்கம் மல ஜலம் கழித்துக் கைகால் சுத்தி செய்தல்.

6 மணி—7–30 மணி பாடங்கள் எழுதுதல் கணக்குச் செய்தல்.

7-30—8-30 பெற்றோர் இடும் குற்றேவல்கள் செய்தல், போஜனம், உடுத்தல்.

8-30க்குப் பாடசாலைக்குப் போதல்.

காலை 9 மணி முதல் 4-30 மணி வரை பாடசாலை நேரம்.

மாலை 4-30—5 வீட்டுக்குப் போதல்.

5—6 மாலை உலா நண்பர்களுடன் பொழுது போக்கு.

6—7-30 இரவு விளக்கின் முன் படித்தல்.

7-30–9 இராப் போஜனம், ஒய்வு.

இரவு 9-30–5 வரை நித்திரை. ஏறக்குறைய இது போன்றது.

வாழ்க்கையில் கால அட்டவணை ஆசிரியன் விவசாயி, உத்யோகஸ்தன்—தொழிலாளி, செல்வவான், கூலியாள்—யாவர்க்கும் அவரவர் வயது—வசிக்கும் இடம் தொழில் இவைகளை யனுசரித்து ஏற்படுத்திக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும்.

நிற்க நமது பாடசாலைக் கால அட்டவணையைக் கவனிப்போம். கால அட்டவணையின்படி ஒரு பாடசாலை ஒரு சிறந்த கடியாரம் போன்று நடந்துவந்தால் அப் பாடசாலையை யாவரும் மதிப்பர். அதற்கு ஆசிரியர்கள் தான் மனது வைக்கவேண்டும். மற்ற விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் இருப்பினும் பள்ளிக்கூடக் கால அட்டவணைப்படி (1) பாடசாலை துவக்கல், (2) பாடங்களை நடத்தல், (3) இண்டர்வல் நேரம், (4) பாடசாலை வேலை முடிவு இந்த நேரங்கள் ஒழுங்குடன் இருக்குமாறு ஆசிரியர்கள் மன ஒற்றுமையுடன் கடமையைச் செலுத்தவேண்டும். தலைமையாசிரியன் இது விஷயத்தில் தன் கடமையைச் செலுத்தப் பின் வாங்குதலோ தாக்ஷணியம் காட்டுவதோ கூடாது.

டைம் டேபில், சிலபஸ், ஆசிரியன் பாடக் குறிப்பு இவைகள் பாடசாலை நாட்களில் முக்கியமாகக் கவனிக்கப்பட்டு வரும் பாடசாலையில் வருஷ முடிவில் கீழ்க்கண்ட நன்மைகள் கண்கூடு.

1. சிலபஸ்படி பாடங்கள் குறையின்றி முடிந்திருக்கும்.

2. குழந்தைகளின் தேர்ச்சி உயர்தரமாக இருக்கும்.

3. தேக்கம், வியர்த்தம் கூட அதிகம் ஏற்படாது (எப்படியெனில் கால அட்டவணைப்படி நடக்கும் பாடசாலை பெற்றோரால் நன்கு மதிக்கப்பட்டுக் குழந்தைகள் பாடசாலையை விட்டு வெளியேறமாட்டா! அதனால் வியர்த்தம் ஏற்படாது. ஆசிரியர்களின் உழைப்பு ஒழுங்காக இருப்பதால் மாணவர்கள் வகுப்பு மாறும்போது தேக்கம் ஏற்படாது.)

4. எந்தக் காலத்தில் அதிகாரிகள் விஜயம் செய்தாலும் சரி. குறைகள் காணமுடியாது.

5. பள்ளிக்கூடத்தின் பொது நிலைமை உயர்தரம் என்று மேலதிகாரிகளின் நற்சாக்ஷிப் பத்திரம்.

6. ஆசிரியர்களின் மனத்திருப்தி. இன்னும் என்ன வேண்டும். ஆகையால் ஆசிரிய நண்பர்கள் கால அட்டவணையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறப்புறுவார்களாக.

'காலம் செய்வது ஞாலம் செய்யாது' விரிக்கிற் பெருகுமாதலால் விரிவஞ்சிச் சுருங்கக் கூறினோம்.

# பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே கூட்டுறவை எவ்வாறுண்டாக்கலாம்

---

[*By* K. Ramachandra Rao, *Headmaster Bd. Boys' Ele. School, Erukkur* (*P.O.*) (*Via*) *Shiyali, Tanjore Dt.*]

ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடைந்த பலன் தரவேண்டுமானல் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசிய மாகும். இவ்விரு திரத்தாரும் ஒத்துழைத்தால்தான் ஆரம்பக் கல்வி பல துறையிலும் ஒங்கி விருத்தியடையும்.

ஆகவே இவ்விருதிரத்தாருக்கும் கூட்டுறவை உண்டாக்க முக்கிய மானது பெற்றோர் சங்கமே.

இதனல் இச்சங்கத்தின்பால் ஆசிரியர்கள் தங்கள் முழு மனதையும் செலுத்தவேண்டும் என்று தெரிகிறது. ஆசிரியர்கள் அவ்வாறு செலுத்தி பெற்றோர் சங்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளாவிட்டால், அஸ்திவாரம் இல்லாமல் வீடு கட்டியதற்கு ஒப்பாக அவர்கள் படும் பிரயாசை வியர்த்தமாகிவிடும்.

பெற்றோரின் கூட்டுறவை ஆசிரியர்கள் ஏன் அடைய முடியவில்லை என்பதற்கான காரணங்களை முதலில் ஆராய்ந்துவிட்டு, பிறகு அதற் கான யோசனைகளையும், திட்டங்களையும் கவனிப்போம்.

## பெற்றோர் சங்கமும் அதன் தற்கால நிலையும்.

தற்கால உலகத்தில் சமுதாய வாழ்க்கையில் பல யூனியன்களும் சங்கங்களும் இருக்கின்றன. இவைகளினல் பல நற்பலன்களை அடை கிறோம். ஆயினும் பெற்றோர் சங்கங்கள் சரிவர நடப்பதில்லை. இது ஏன்? கல்வி இலாகா அதிகாரிகளால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்கு ஆசிரியர்கள் கீழ்ப்பட்டவர்களாதலால் அவர்கள் அரும்பாடுபட்டு ஏதோ வருஷத்திற்கு குறைந்தது இரண்டொரு இப்பெற்றோர் சங்கத்தைக் கூட்டவேண்டியிருக்கிறது. இதுவும் சிற்சில இடங்களில் நடத்த பெருங் கஷ்டமாயிருக்கிறது.

## பெற்றோர் சங்கம் சரிவர நன்மை பெருமல் இருப்பது ஏன் ?

தினசரி சற்றேறக்குறைய ஒன்றரையணுகூட வருமான மில்லாத நிலையில் பெரும்பான்மையான பெற்றோர்கள் இருக்கின்றனர். இந்நிலை யில் உள்ள பெற்றோர்கள் எங்ஙனம் தங்கள் குழந்தைகளை படிக்கும் வயது காலம் முழுமையும் படிப்பிலேயே செலவழிக்க அனுமதிக்க முடியும். அவர்களுக்கு மனம் இருப்பினும் நிலைமை இடங்கொடுக்கு மென்று உறுதியாய்ச் சொல்வதற்கில்லை. மேலும் B .A , M.A., போன்ற பெரிய பெரிய பட்டங்கள் பெற்றவர்கள்கூட கையில் இருந்த பொருளை

செலவழித்துவிட்டு, வயிற்றுப் பிழைப்புக்கான வழி யொன்றும் இல்லாமல் தவிக்கின்றனர். இக்காரணத்தை ஆஸ்பதமாக்கிக்கொண்டு சில பாமரர்களாகிய பெற்றோர்கள் கல்வியின் அவசியத்தை உணராது ஆசிரியர்களைப் பார்த்து 'ஆமாங்கய்யா! எம்மவந்தா B.A., பாஸ் பண்ணி எனக்கு சம்பாதிச்சி போடப்போரா'' என்று கூறுகின்றனர். இத்தகைய அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் பெற்றோர்கள் கல்வியின்மீது எங்ஙனம் ஆழ்ந்த நம்பிக்கையையும், ஆவலையும் செலுத்துவார்கள் என்று எதிர் பார்க்க முடியும்? இவைபோன்ற காரணங்களே ஸென்ஸஸ் கணக்குப்படி படிக்கும் வயதுள்ள பாலர்கள் அனைவரும் பாடசாலையில் வந்து படிக்காமைக்கும் தட்டுத் தடுமாறிச் சேர்ந்தாலும் 1 முதல் 5 வகுப்பு முடிய படியாமைக்கும் அடிப்படையானவை என்று கூறலாம். இதனால் பெற்றோர்களின்மீது குற்றங் கூறுவதாகவோ அல்லது ஒரு சாக்குப் போக்கு சொல்லுவதாகவோ கருதக்கூடாது.

குழந்தைகளின கல்வியில் பெற்றோரின் சிரத்தை.

நிறைந்த செல்வம் முதலியவற்றை ஒரு தந்தை தன் மகனுக்கு வைத்திருந்தபோதிலும், அதனால் ஒரு பலனும் இல்லை. அச்செல்வம் முதலியவற்றை நல்ல வழியில் பயன்படுத்தி வாழும் நிலையை உண்டாக்குவது கல்வியே, ஆதலால் மகன் கல்வி கற்கும்படி செய்வதே தந்தையின் முதற்கடமை அரண்மனையில் பிறந்த அரசகுமாரனும் பள்ளிக்கூடத்தில் சாணையிடப்பட்டால்தான் பிற்காலத்தில் பிரகாசிப்பான். நிறைந்த செல்வம் மிகுந்த ஒருவன் பள்ளிக்கூடப்பயிற்சி யில்லாமல் தாழ்ந்த நிலையை ஒருசமயம் அடையும்படி நேரிட்டால் அப்பொழுது அவன் தன் தந்தையைக் குறித்து நொந்துகொள்வதாக தமிழில் ஒரு செய்யுள் உண்டு. அச்செய்யுள்,

'' அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்தல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லென்றன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னே தந்தை யாகிய பாதகனே ''

என்பது. செம்பொன்னும் ஆடையும் இருந்தும் பள்ளிக்கூடப் பயிற்சியின்மையால் அவன் கெட்டுப்போனதை இப்பாடல் விளக்குகின்றது. இதனால் பெற்றோர்கள் கல்வியில் சிரத்தையுடையவரா யிருக்கவேண்டும் என்று தெரிகிறதல்லவா.

பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உள்ள தாரதம்மியம்.

தாய் தந்தையர் மக்களைப்பெற்ற கடமையோடு அமைகின்றனர். ஆனால் ஓர் ஆசிரியரோ தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணாக்கன் அவனது பிற்காலத்தில் சிறந்தவனாய் விளங்க அவனுக்கு அறிவைப் புகட்டவும், அம்மாணாக்கன் சுகமாய்த் தன் ஜீவிய வாழ்க்கையை நடத்த உதவக்கூடியதான பயிற்சியையும் அளிக்கவேண்டி யிருக்கிறது. இச்

சேவை பெரும்புண்ணியமே. இவ்வபிப்பிராயத்தை வலியுறுத்த ஒரு திருஷ்டாந்தத்தைக் கூறுகிறேன். இராமர் முதலிய நால்வரின் வளர்ந்த நெறியைக் குறித்து "இவர்களை தசரதன் பெற்றான் என்னும் பெயரேயல்லாமல், உண்மையில் தசரதது புத்திரர்களை உலகுக்குப் பயன்படும்படி செய்தவர் வசிஷ்டரே" என்று விசுவாமித்திரர் கூறியிருப்பதாக கம்பநாடர் கூறியிருக்கிறார். இவ்வாசிரியத் தொழிலுக்கு இருக்கும் கௌரவத்தின் மகத்துவந்தான் என்னவோ.

## ஆசிரியர்களின் ஊக்கம்.

பெற்றோர்களிடம் இருக்கப்பட்ட குற்றம்—குறைகள் எவையானாலும் சரி. அவைகளைப் பொருள்படுத்தல் கூடாது. ஏனென்றால் இப்பொழுது நாம் எடுத்துக்கொண்ட விஷயம் அவ்வாறு கருதி சும்மா இருந்துவிடுவதற்கல்ல. பெற்றோர் சங்கத்தின் மூலம் பெற்றோரின் கூட்டுறவை அடைய ஆசிரியர்கள் தளரா ஊக்கமும் நெஞ்சுறுதியும் உடையவர்களாய் இருக்கவேண்டும். ஓர் புஷ்பத்தை நாடிவரும் வண்டைப்போல பெற்றோரை நாடி ஆசிரியர்கள் தான் செல்லவேண்டும் ஏனெனில் தேனைச் சேகரித்து மானிடர்களுக்கு உதவும் ஓர் தேனீயின் கதியில்தான் ஆரம்பாசிரியர்கள் இருக்கிறார்கள். உழைப்போ அதிகம். ஊதியமோ சொற்பம். ஆனால் சேவையோ தெய்வீக சேவை. இதனாலே தான் நமதரும் கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரும்,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு அறிவித்தல்"

என்று கூறியிருக்கிறார் போலும். ஆகையால் ஆசிரியர்கள் காலதேச வர்த்தமானத்தை உணர்ந்து பெற்றோரின் கூட்டுறவை அடைய சதா ஊக்கமுள்ளவராயிருக்க வேண்டும்.

பெற்றோரை அடியில் கண்ட உபாயங்களால் கவர்ச்சி செய்யலாம்.

## மாணவர்களின் தேர்ச்சியும்—நடவடிக்கையும்.

ஒவ்வொரு மாணவனும் வீட்டில் வாசித்தானா என்பதை அறிந்து கொள்ள பெற்றோரிடம் இருந்து சீட்டு எழுதி வாங்கிவரச் செய்வதுடன், அவன் வகுப்பில் வாசிக்கும் தேர்ச்சியைக் குறித்தும் நடத்தையைக் குறித்தும் அடிக்கடி பெற்றோர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். கால், அரை, முழு ஆண்டு பரிசைஷகளில்மாணவர்களது தேர்ச்சியைப்பற்றி பெற்றோருக்குத் தெரிவிக்க வேண்டும். எடை, உயரம், நடை முதலிய வற்றைக் குறித்தும், உடம்பில்உள்ள குறையைக் குறித்தும் தெரிவித்து அவைகளை நீக்க முயற்சிசெய்யலாம்.

**மாணவர்க் கழகம்**

இக்கழகமானது மாணவர் சொல்வன்மையைத் தோற்றுவிக்கவும், கோழைத்தனத்தைப் போக்கவும், குறிப்பிட்ட பல விஷயங்களைப்பற்றி பல பெரியோர்கள் முன்னிலையில் தைரியத்துடன் பேசவும், ஏற்படுத்தப் படுகிறது. இதன் ஆதரவில் நடத்தப்படும் சாதாரணக் கூட்டங்களுக்கு ஆசிரியர்களும், சிறப்புக் கூட்டங்களுக்குப் பெற்றோர்களோ அல்லது வெளியூர் பெரியோர்களோ வந்து தலைமை வகிக்கும்படி திட்டம் செய்யலாம். இந்த சமயங்களில் அநேகம் பெற்றோர்கள் வரலாம்' ஆனபடியால் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் தேர்ச்சி, பாடசாலையின் விருத்தி முதலியவைகளை அறிந்துகொள்ள இடமேற்படுகிறது.

**வாசக புத்தகசாலை**

இவ்விரண்டையும் இரண்டு நேத்திரங்கள் என்றே சொல்லி விடலாம். இவ்விரண்டு சாலைகளும் நிறுவ ஏற்பாடு செய்து நிறுவப்பட்டால் பல பெற்றோர்கள் வர நேரிடும். அப்பொழுது ஆசிரியர்களும் பெற்றோர்களும் அடிக்கடி சந்தித்துப் பேச இடமுண்டாகிறது.

**நாடக மன்றம்**

ஓர் சிறிய நாடக மன்றம் ஒவ்வொரு கிராம பாடசாலையிலும் அமைக்கபபட வேண்டும். இந்நாடக மன்றத்தில் குழந்தைகள் தங்கள் இனிய குரலோடும், மழலைச் சொல்லோடும் கூடிய சொல்லாட்டங்களை நடத்திக் காட்டுங்கால் சில பெற்றோர்கள் பார்த்துக் களிப்புற நேரிடுகிறது. பெற்றோர்களில் சிலர் நாடக விஜயத்தில் ஞானமுள்ளவர்களாயிருந்தால் அவர்களையும் இதில் பங்கெடுத்துக்கொண்டு ஆசிரியருடன் ஒத்துழைக்கும்படிச் செய்ய முயற்சி செய்யலாம்.

**விளையாட்டும் பந்தயங்களும்**

இதைப் பாடசாலை மாணவர்களுக்கு என்று மாத்திரம் ஏற்படுத்தாமல் கிராமத்திலுள்ள வாலிபர், முதலியோர் அனைவர்க்கும் வைத்து நடத்தி வெகுமதிகள் அளிக்கலாம். புதிய விளையாட்டுகளையும் கற்பிக்கலாம். இதனால் பெற்றோர் ஆசிரியர் இவ்விருவருக்கும் கூட்டுறவு உணர்ச்சி விருத்தியாகிறது.

**ரேடியோ**

இதன் அவசியத்தைப்பற்றி 'பாலர் கல்வியில்' சகோதர ஆசிரியர் ஒருவரால் வெகு அழகாக முன்னமேயே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. கிராமாந்திரங்களில் அமைத்துக் கொள்வதில் கொஞ்சம் சிரமமாகத்தானிருக்கும்.

**பெற்றோர் சங்க சீர்திருத்தம்**

இச்சங்க சார்பாக முக்கியமாக **'Open day' 'Parents day'** போன்ற விழாக்களும், சுகாதார வாரம், பிராணி வாரம் போன்றவைகளும் மிகவும் சிறப்பாக நடக்க ஏற்பாடு செய்யவேண்டும். எல்லாப் பெற்றோர்களும் இச்சங்கத்திற்கு வர முடியாவிட்டாலும், கிராமத்தில்

எத்தனை தெருக்கள் இருக்கின்றனவோ அத்தனை தெருக்களுக்கு குறைந்தது தெருவுக்கு ஒருவர் வீதமாவது இச்சங்கம் கூடும்பொழுது வர பிரசாரம் செய்யவேண்டும். பெற்றோர்களில் ஒருவரை இச்சங்கத்தின் தலைவராகவும், மற்றொருவரை உபதலைவராகவும், பாடசாலைத் தலைமை யாசிரியரோ அல்லது உதவி ஆசிரியரோ இச்சங்கத்தின் (ex officio) காரியதரிசியாகவும் இருக்கவேண்டும். பெற்றோர் சங்கம் கூடும் தினம், நேரம், இவைகள் பெற்றோர்களின் சௌகரியத்தை அனுசரித்ததாக இருக்கவேண்டும். மீட்டிங்கு நடவடிக்கை குறிப்புப் புத்தகம் நோட்டீஸ் புத்தகம், இவைகள் ஒழுங்காய் வைக்கப்பட வேண்டும். இப்பெற்றோர் சங்கத்தில் பாட திட்டத்திற்கான முறைகளை ஆசிரியர்கள் விவரித்துக் கூறவேண்டும். பிள்ளைகள் வேலை செய்து வரும்படியான வேலைப்பாட்டை மேலே சொன்ன விசேஷ காலங்களில் பெற்றோர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும். இச்சமயங்களில் பெற்றோர்கள் என்ன உதவி செய்யக் கூடுமோ அவர்களிடமிருந்து அதை அடைய முயற்சி செய்யலாம்.

முடிவு

ஆகவே இதுகாறும் மேலே கூறியவை பொதுவாக ஜன சமூகத்தைக் குறித்ததாக இருந்தபோதிலும், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் கல்வி யிலாகா விதிகள் ஒரு சமயம் ஆசிரியர்களின் நலத்தையும் பாதிக்கக் கூடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. எவ்வகையிற் பார்த்தாலும் பெற்றோரின் கூட்டுறவு ஆசிரியர்களுக்கு ஓர் முக்கியமானதும் தள்ளவொண்ணாததுமான விஷயமாயிருக்கிறது.

இன்றைய அரசியல் உலகம் மட்டும் அல்ல. சமுதாயம், மதம் போன்ற யாவும் கிராமங்களை நாடி நிற்கின்றன. கிராமங்கள்தான் தேசத்தின் ஜீவ நாடிகள். கிராமவாசிகள் கல்வி, பொருளாதாரம், சமுதாயம் ஆகிய இம்மூன்றிலும் முன்னேற்ற மடைந்தால்தான் தேசம் சுபிட்சமடையும். ஏற்கனவே சொன்னது போல் கிராமத்தில் கல்வியைப் பரப்புவது தெய்வீக சேவை என்னலாம். இன்றைய மாணவர்கள்தான் வருங்கால பிரஜைகளாவார்கள். அவர்கள் தக்க அறிவும், ஒழுக்கமும், தெய்வ சிந்தனையும் பெற்று மிளிரவேண்டும். அன்பு நெறி அவர்களிடம் ஸ்திரமாகும்படி செய்யவேண்டும். இவ்வவசியத்தை உத்தேசித்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் சகோதரர்கள் போல் இருக்க வேண்டும். பெற்றோர்கள் இவ்விஷயத்தில் தங்களால் ஆகவேண்டிய கடமையைச் செய்யத் தவறக்கூடாது. ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒன்றுபட்டு கிராமக் கல்வி என்னும் இரதத்தை ஒற்றுமை என்னும் கயிற்றால் இழுப்போம். இதற்கு இறைவனும் அருள்புரிவானாக.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

"பெற்றோர் சங்கம் இன்றேல்
மற்றோர் பலன் இல்லை"

"சங்கம் செய்வது தங்கம் செய்யாது"

# செய்தித் திரட்டு

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

### (a) ஆண்டு விழா

23—8—42-ல் இப்பாடசாலையின் ஆறாவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை ஹைகோர்ட்டு மாஸ்டர் ஸ்ரீ B. C. சங்கரநாராயணய்யர் அவர்கள் தலைமை வகித்தார். தாய்மார்களும், பெற்றோர்களும், பல பிரமுகர்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம், ஸ்தோத்திரப் பாடல்கள் முதலியன நடைபெற்றன. தலைவர் அவர்கள் முடிவுரையில், குழந்தைகளுக்குப் பல துறைகளிலும் பயிற்சி அளிப்பதை வெகுவாக சிலாகித்து இன்னும் பல விதங்களில் முன்னேற்றமடையும்படி கடவுளைத் தாம் பிரார்த்திப்பதாகக்கூறி முடித்தார்.

### (b) பாஷா அபிவிருத்தினி சங்கம்

27—8—42-ல் இச்சங்கத்தின் ஐந்தாவது கூட்டம் ரிடையர்ட் ஆசிரியர் ஸ்ரீ C. V. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறுவர் சிறுமிகள் ஒரு கதம்பக் கச்சேரி நடத்தினர். மாணவ மாணவிகள் 'பரோபகாரம்' என்பது பற்றிப் பேசினர். தலைவர் இச்சங்கத்தின் மூலம் குழந்தைகள் தாய்பாஷையை விருத்தி செய்து கொள்ளலாமென்றும், இச்சங்கமும் பாடசாலையும் மேன்மேலும் விருத்தியடையத் தாம் கடவுளைப் பிரார்த்திப்பதாயும் கூறினர்.

### (c) பாஷா அபிவிருத்தினி சங்கம் (ஆங்கிலப்பிரிவு)

29—8—42-ல் இச்சங்கம் மிஸஸ் ராஜம் ஜகன்னாதன் அவர்கள் தலைமையில் கூடிற்று. மாணவர்கள் "**My Alma Mater**" என்பது பற்றிப் பேசினார்கள். தலைவி அவர்கள் பள்ளிக்கூட அலுவல்களைப் பாராட்டிப் பேசினர்.

### (d) ஓர் அனுதாபம்

4—9—42-ல் மானேஜ்மெண்டார் ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லாரும் சேர்ந்து இப்பாடசாலைக்குப் போஷகாரயிருந்த ராவ்சாகேப் ஏ. கே. சுந்தரேசய்யர் 3—9—42 அன்று காலமானதற்கு அனுதாபம் தெரிவித்தனர்.

### (e) பாரதியார் கழகம்

11—9—42-ல் பாரதியார் தினம் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பாரதியார் படம் ஒன்று திறக்கப்பட்டது. பாடல் போட்டி

3

நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

(f) பஜனை சங்கம்

14—9—42-ல் விநாயகசதுர்த்தியை முன்னிட்டு விசேஷ பஜனை நடைபெற்றது. இப்பாடசாலை சம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ பைரவசுந்தர சாஸ்திரிகள் 'கணேச மாகாத்மியம்' என்பதைப் பற்றி எளிய நடையில் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறினர்.

---

## போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், ஸ்ரீபெரும்புத்தூர்

5—9—42-ல் இச்சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது, ஜில்லா போர்டார் கூறியுள்ளபடியும் சர்க்கார் உத்திரவுப்படி 1—3—42 முதல் சேரவேண்டிய சம்பள உயர்வைக் கொடுத்துதவும்படியும், சென்னை சர்க்கார் அறிக்கையில் கண்டபடி யுத்தப்படி கொடுத்துதவும்படியும், யுத்த ஏரியாவிலுள்ளவர்களுக்குப் பிரத்யேகமாக 25% சலுகை காட்டவேண்டுமென்றும், கிராமங்களில் ஆசிரியர்களுக்கு வரும் மணியார்டர்களை கிராம அதிகாரிகள் முன்னிலையில் பட்வாடா செய்யாமல் நேரிடக் கொடுக்கும்படியும் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், சிங்கப்பெருமாள் கோயில் வட்டம்.

8—8—42-ல் இச்சங்கத்தின் சார்பில் பொருட்காட்சிசாலை ஆண்டு விழா நடைபெற்றது. செங்கல்பட்டு ஜில்லாக் கல்வி இலாகாத் தலைவர் ஸ்ரீ P. ராகவாச்சாரியார் அவர்கள் திறந்து வைத்தார். பல பேர் வந்து பார்வையிட்டனர். செவ்வையாகச் செய்து வைத்த பாடசாலைகளுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. மாலையில் சில பாடசாலை மாணவ மாணவிகளால் நடிப்பும், சொல்லாட்டமும் நடைபெற்றன. பின்பு, செங்கல்பட்டு போதனா முறைப் பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் "தற்கால ஆரம்ப ஆசிரியர்கள்" என்னும் பொருள் பற்றிப் பேசினர். தலைவர் அவர்கள், இந்த நெருக்கடியான காலத்தில் பொருட்காட்சிகளை அருமையாகச் செய்து வைத்தது மிகவும் மெச்சத் தக்கது என்றும் இன்னும் பல சாதாரணமான பொருள்கள் இருந்தால் குழந்தைகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்றும், முன் நின்று நடத்திய உதவிப் பரிசோதகர்களுக்குத் தாம் நன்றி யளிப்பதாயும் கூறி முடித்தார்.

---

## இந்து மத பாடசாலை, வாலாஜாபாத்.

23—8—42-ல் இப்பாடசாலையின் சார்பிலுள்ள விரதச்சாரி அணியின் முதலாண்டு விழா திரு S. வெங்கடேச ஐயங்கார் அவர்கள்

தலைமையில் நடைபெற்றது. பல பிரமுகர்கள் விஜயம் செய்து பாடசாலையையும், தொழிற்சாலைகளையும் பார்வையிட்டனர். தலைவர் இப்பாடசாலை அலுவல்களைப் பாராட்டி, இதுவே தென்னாட்டு சாந்திநிகேதன் எனப்புகழ்ந்து ரூபாய் நூறு நன்கொடை அளிப்பதாயும் வாக்களித்தார். விரதச்சாரிச் சிறுவர்கள் ஆடல் பாடல், ஆசனங்கள், உடற்பயிற்சிகள் முதலியவற்றைக்காட்டி மகிழ்வித்தனர்.

---

## ஹிந்து உயர்தர ஆரம்ப பாடசாலை, சந்தானகோபாலபுரம், விழுப்புரம்

2—9—42-ல் இப்பாடசாலை செஞ்சிலுவைச் சங்கத்தின் முதலாண்டு விழா ஹெல்த் ஆபீஸர் ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறுமிகள் சுகாதாரக் கும்மி கோலாட்டம் நடத்திக் காட்டினர். உயர்தர பாடசாலை ஆசிரியர் ஸ்ரீராமசுவாமி அய்யங்கார் அவர்கள் 'செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கம்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் சுகாதாரக் கிராமப் பிரசாரம் என்ற விஷயத்தை நடித்துக் காட்டினர். சுத்தம்—அசுத்தம் என்ற விஷயத்தைச் சிறுமிகள் தர்க்கப் பாட்டாகப் பாடிக் காண்பித்தனர். தலைவர் முடிவுரையில் இச்சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும், சுத்தமாக இருக்கப் பழகும் முறைகளைப் பற்றியும் விரிவாகப் பேசினர்.

---

## போர்டு ஹிந்து ஆண்உயர்தர ஆரம்பபாடசாலை, ஆயக்குடி.

16-8-42-ல் இப்பாடசாலையின் பொன்விழாக் கொண்டாடப்பட்டது. பழனி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சிவராமய்யர் அவர்கள் தலைமைவகித்தார். திருச்சி ஸ்ரீ N. ஹாலாஸ்யம் அவர்கள் 'கிராமங்களும் ஆரம்பக்கல்வியும்' என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர். மாலையில் சங்கீதக்கச்சேரி நடைபெற்றது. 18-8-42 இரவு 'வெனீஸ் வணிகன்' என்ற நாடகத்தை தமிழில் மாணவர்கள் நடித்துக்காண்பித்தனர்.

---

## போர்டு உயர்தர ஆரம்பபாடசாலை, ஆண்டிப்பட்டி.

15-8-42-ல் இப்பாடசாலை மாணவர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டுவிழா உள்ளூர் பிரமுகர் ஸ்ரீ பெரியகருப்பநாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல பகுதிகளிலிருந்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் விஜயம் செய்திருந்தனர். பாடசாலைப் பரிசோதகர் ஸ்ரீ சேஷாத்ரி அய்யங்கார் அவர்கள் 'பிற்காலப் பிரஜைகள்' என்பது பற்றிப்பேசினர். பாஸ்டர் உயர்திரு. நரசிங்கம் அவர்கள் 'மாணவர் பண்பு' என்பதுபற்றியும், தமிழ்பண்டிதர் உசேன்கான் அவர்கள்

'மாணவர்களின் நிலைமையும் ஆசிரியர்களின் தலைமையும்' என்பதுபற்றியும் உபந்நியசித்தார்கள். மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டம் நடத்தினார்கள்.

---

## பேளூர் சென்டர் உபாத்திமைச் சங்கங்களின் ஆண்டு விழா, வாழப்பாடி

15—8—42-ல் மேற்படி விழா சேலம் ஜில்லாக்கல்வி அதிகாரி ஸ்ரீ V. நடராஜன் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ சென்னகேசவய்யாவால் இனிய புல்லாங்குழல் கச்சேரியும், பெண் பாடசாலை மாணவிகளால் கும்மி கோலாட்டமும் நடைபெற்றன. ஆத்தூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சங்கரநாராயணய்யர் அவர்கள் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். தலைவர் அவர்கள் 'புதிய பாட திட்டமும் தமிழ் போதிக்கும் முறையும்' என்பதுபற்றி மிகவும் தெளிவாகப்பேசினார். டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் முதல் வகுப்பிற்கு விளையாட்டு மூலமும் கார்டுகளின் மூலமும் பாடங்களை போதிக்க சில குறிப்புகள் கொடுத்தார்.

---

## போர்டு உயர்தர ஆரம்பபாடசாலை, சங்ககிரி.

21—8—42-ல் இப்பாடசாலை மாணவர் கழகக் கூட்டம் நடைபெற்றது. இப்பள்ளிக்கூட ஆசிரியராயிருந்து யுத்த சேவை செய்து வரும் (விடுமுறையில் வந்திருக்கும்) ஸ்ரீ எபிநேஸர் அவர்கள் தலைமை வகித்தார். 'யுத்தமும் தற்கால நிலைமையும்' என்பது பற்றி மாணவர்களால் பேசப்பட்டது. தலைவர் மாணவர்கள் செய்யக்கூடிய யுத்த முயற்சிகளைப் பற்றியும், பிரிட்டிஷாரின் யுத்த முஸ்தீபுகளைப்பற்றியும் விரிவாகப் பேசினார். பிறகு மகாதேவ தேசாயின் அகால மரணத்திற்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். தலைமை ஆசிரியர், செல்லப்ப கவுண்டர், வந்தனோபசாரம் கூறினார்.

---

## திருச்சங்கோடு தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், கொங்கணாபுரம்.

26-7-42 ல் இச்சங்கத்தின் நிர்வாக சபை சங்கத் தலைவர் ஸ்ரீ வெங்கட்டராமய்யர் அவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது. அப்பொழுது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—(1) டாக்டர் உ. வே. சாமினாதையர் மரணத்திற்கு அனுதாபம் காட்டுகிறது. (2) கல்வி இலாகா டைரெக்டர் அவர்கட்கு 'ஸர்' பட்டம் வழங்கப்பட்டதற்கு சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. (3) ஆசிரியர்

களைப் பாதிக்கும் சில உத்தரவுகளை நீக்கியதற்காக ஜில்லாபோர்டு பிரசிடெண்டுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. (4) யுத்த நெருக்கடியை உத்தேசித்து மூன்று மாத சம்பளத்தை முன்பணமாகக் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறது. (5) ஸ்டேஷனரி சாமான்கள் விலையேற்றத்தை உத்தேசித்து சாதல்வார் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்.

5-9-42 ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. வெங்கட்டராம அய்யர் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. அப்பொழுது திருவையாறு போர்டு பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ பஞ்சநதம் பிள்ளை அவர்கள் முதல் வகுப்பு மாணவர்கட்கு 300 வார்த்தைகளைக் கொண்டு தாய்பாஷை கற்பித்தல் என்ற ஒருமாதிரிப் பாடத்தைக் நடத்திக் காட்டினார். தலைவர் அவர்கள் கணிதம் போதித்தலைப்பற்றி விரிவாகப் பேசினார். காரியதரிசி T. S. மாருதிராவ் நன்றிகூற அரச வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## பாரதி தினக் கொண்டாட்டம், கும்பகோணம்

6—9—42-ல் இந்நகரில் பாரதி தினக் கொண்டாட்டத்தை யொட்டி பாரதி பாடல் போட்டி நடைபெற்றது. சுமார் 100-க்கு மேல்பட்ட ஆரம்ப பாடசாலைச் சிறுவர்களும் சிறுமிகளும் கலந்து கொண்டனர். முதற்பரிசு, ஒரு வெள்ளிக்கோப்பை, ஸ்ரீராமா ஆரம்ப பாடசாலைச் சிறுமி எம். காந்தாவுக்கு அளிக்கப்பட்டது ஆறு வயதுள்ள சிறுமி சரஸ்வதியின் பாட்டை மெச்சி அவளுக்கு விசேஷப் பரிசு அளிக்கப்பட்டது. இவ்வாண்டு ஆரம்ப பாடசாலைச் சிறுமியர்க்கான சுற்றும் வெள்ளிக் கோப்பை (Rolling silver cup) மொத்தத்தில் அதிக மார்க்குகள் வாங்கிய ஸ்ரீராமா ஆரம்ப பாடசாலைக்கே அளிக்கப் பட்டது.

---

குறிப்பு:—சந்தாதாரர்களுக்கு அறிக்கை யென்று ராப்பர் 2-வது பக்கத்தில் அச்சிட்டிருப்பதில் ஆகஸ்டு மாதத்துடன் என்றிருப்பதைச் செப்டம்பர் மாதத்துடனென்று திருத்தி வாசிக்கக் கோருகிறோம். —பத்திராதிபர்.

# கடிதப் பெட்டி

## செங்கற்பட்டு ஜில்லா போர்டு ஸ்கூல் ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

இவ்வருடம் காஞ்சிபுரத்தில் நடத்தவேண்டிய மாநாடு யாது காரணம் பற்றியோ நடத்தப்படாம லிருக்கிறது. ஆண்டுதோறும் விடாது நடத்துதல் நலம்.

நிற்க, ஆசிரியர்களுக்குரிய சம்பள உயர்வைத் தவராது கொடுத்து விடுவதாக வாக்களித்த அரசாங்கத்தாரும், ஜில்லா போர்டாரும், 1—3—'42 முதல் கொடுக்கவேண்டிய சம்பள உயர்வை இது வரையில் கொடுக்கா திருக்கிறார்கள். தவிர, சென்னை சர்க்கார் 28—8—'42-ல் வெளியிட்டிருக்கிற அறிக்கைப்படி, யுத்தப்படி ஆசிரியர்களுக்கு அளிக்கா திருக்கிறார்கள். தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்று சொல்லும்படியான பலர், சர்க்கார் உத்திரவுப்படி பஞ்சப்படி பெற்று வருவதாகத் தெரிகிறது. நமது தொண்டு புனிதமானது என்று சொல்லிக்கொண்டு நம்மை தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தாலூக்கா யூனியன்களும், நமக்குக் கொடுக்க வேண்டிய (1) சம்பள உயர்வு. (2) யுத்த அலவன்ஸ் முதலியவைகளைப்பற்றி சர்ச்சை செய்யவும், வரும் டிசம்பர் மாதத்திற்குள் எந்த தாலூக்கா யூனியனாவது மாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்யவும் முன்வருவார்களாக. யூனியன்களின் பதிலை எதிர்பார்க்கும் ஏழை ஆசிரியன்,

சி. பாலசுப்ரமண்யம், கோவூர். பூனமல்லி தபால்.


## திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்

(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் சிலவு பிரததியேகம்)

—: வேண்டுபவர்கள் :—

**ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்**

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

—: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :—

# பத்திராதிபர் குறிப்பு

---

## பஞ்சப்படி (Dearness Allowance)

போரின் காரணமாக பொருள்களின் விலை அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. இதைத் தடுக்க முடியவில்லை. விலைக்கட்டுப் பாடு செய்ய முயன்றால் பொருள்களே அகப்படாமல் போய் விடுகிறது. இந்நிலையில் ஆசிரியர்கள் கஷ்டம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதிலும் உதவி பெறும் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்து வரும் ஆசிரியர்களில் பலர் கவர்ன்மெண்டிடமிருந்து கிராண்டு வந்த பிறகே தங்கள் சம்பளத்தைப் பெறுகிறார்கள். எனவே மூன்று மாதத்துக்கு ஒருமுறை தான் இவர்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது. அது எவ்வளவு குறைந்த தொகை என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. இத்தொகை பல வருஷங்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. போர்டு, முனிசிபல் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பளத்திட்டம் 1934-ம் வருஷத்தில் துரைத்தனத்தாரால் வரையறுக்கப்பட்டது. உதவி பெறும் பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும் ஆசிரியர்கள் சார்பாக அளிக்கும் கிராண்டு, இந்தத் திட்டத்திலும் மிகக் குறைந்தது. சமீப காலத்தில் Sir ஸ்டாதம் துரையின் பெருமுயற்சியால், இத்துடன் ரூ. 2 சேர்க்கப்பட்டது. ஆயினும், ஆசிரியர்சம்பளத்துக்காக கொடுக்கும் கிராண்டில் 15 சத வீதம் மானேஜ்மெண்டார் இதர செலவுக்கு உபயோகித்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டதால், ஆசிரியர்கள் இவ்வுயர்வினால் ஒரு பயனும் அடையவில்லை. தவிர, போரினால் ஏற்பட்ட இப்பஞ்ச காலத்தில் இந்த சொல்ப சம்பளத்தைக் கொண்டு ஆசிரியர் ஜீவிப்பது மிகவும் இயலாத காரியம். இது நமது துரைத்தனத்தாருக்கு நன்கு தெரியும் என்றே நம்புகிறோம். கவர்ன்மெண்டில் வேலைபார்த்துவரும் சிப்பந்திகளுக்கு பஞ்சப்படி (Dearness allowance) கொடுக்குமாறு சமீபத்தில் அவர்கள் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளார்கள். அதிலிருந்து விலை உயர்வினால் ஏற்பட்டுள்ள வாழ்க்கை கஷ்டத்தை அவர்கள் நன்கறிந்துள்ளார்கள் என்றே சொல்லவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் எண்ணிக்கை 60,000 என்றேவைத்துக் கொள்வோம். இவர்களுக்கு பஞ்சப்படி கொடுப்பது என்றால், பணம் அதிகமாகவே வேண்டியிருக்கும். என்னசெய்வது என்று ஏங்கி ஆசிரியர்கள்பால் அனுதாபத்தை இனிமையான சொற்களால் தெரிவித்தால்

ஆசிரியர்களுக்குச் சோறு ஆய்விடுமா? கவர்ன்மெண்டு சிப்பந்திகளுக்கு பஞ்சப்படி உத்திரவிடுவதில் ஏராளமான சிலவு ஆகப்போவதில்லையா? தைரியமாக அதைச் சிலவிட கவர்ன்மெண்டு முன்வரவில்லையா? ஏனைய நாடுகளைப்போல் நம் நாட்டிலும் கல்விப்பொறுப்பு முழுவதையும் துரைத்தனத்தாரே ஏற்றுக்கொண்டால் இவ்வாசிரியர்கள் எல்லாரும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாக மாட்டார்களா?

எனவே உதவிபெறும் பள்ளிக்கூடங்களாயிருந்த போதிலும், இவைகளை இந்நெருக்கடியான காலத்திலாவது துரைத்தனத்தார் தங்கள் சொந்தப் பள்ளிக்கூடங்கள் என்றே கருதி, அங்குள்ள ஆசிரியர்களுக்கு, குறைந்த சம்பளம் வாங்கும் தங்கள் சிப்பந்திகளுக்கு என்ன உதவி செய்கிறார்களோ அந்த உதவியைச் செய்ய முன்வரவேண்டும்.

பணம் இல்லை என்று சொல்லி இவர்களை வறுமையில் ஆழ்த்தி வைப்பது, அதர்மமாகும். அதனால் நாட்டிற்கு தீமையே ஒழிய ஒருவித நன்மையும் ஏற்படாது. பசியினாலும் வறுமையினாலும் கஷ்டப்படும் ஆசிரியர் எவ்வாறு பாலர்களுக்கு உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் கல்வி போதிக்க இயலும்? நம் நாட்டின் பாலர்களின் நன்மையைக் கருதியே, ஆசிரியர்களுக்குப் போதிய உதவியை உடனே அளிக்க நமது கவர்ன்மெண்டார் முன்வர வேண்டும். அப்படி முன் வருவார்கள் என்றே நம்புகிறோம். எல்லா ஆசிரியர் சங்கங்களும், தங்கள் கூட்டத்தில் பஞ்சப்படி வேண்டுமென்ற அவசியத்தைத் தெரிவிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றி அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியர் யூனியன்களும் இது விஷயமாக துரைத்தனத்தாரை வற்புறுத்திக் கேட்கவேண்டும்.

---

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ | விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, | ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, | ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, | ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, | ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

REGD. NO 1506

அசோகா

MILD SCENTED ASOKA

ரிஜிஸ்டர் நெ. 1506

## அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

Regd. No. M. 3473

# S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள்:

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள்:

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினல், கிடைக்கக் கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.